[1994 ஏப்ரல் 26

2. வினா கேட்க அழைத்தபோது இருக்கையில் இல்லாத உறுப்பினர் வினா நேரம் முடிந்த பிறகு அதுகுறித்து எழுப்புதல்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கூப்பிடும்போது நீங்கள் இருக்கையில் இல்லை. அதற்குமேல் அந்தக் கேள்வி முக்கியமானது என்றால் நீங்கள் எழுதிக் கொடுங்கள். முன் அனுமதி பெற்று வந்திருந்தால் அந்தமாதிரித் திரும்ப எடுக்கலாம். அந்தமாதிரி இல்லை. (குறுக்கீடு) இல்லை, இப்போது முடியாது. நீங்கள் எழுதிக் கொடுங்கள். திரும்ப நாளைக்கு, நாளை மறுநாள் லிஸ்டில் போட்டுக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) இல்லை. இப்போது முக்கியமான பிரச்சினை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை--பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முழுவதும் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துக்கொள்ளக் கூடாது என்ற மிகப் பெரும் தண்டனையை நீங்கள் அவருக்கு வழங்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அளித்த தண்டனையைப்பற்றி நீங்கள் உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. அந்த உறுப்பினரைப் போலவே நீங்களும் நடந்துகொள்கிறீர்கள். அந்த உறுப்பினர் பற்றி நானே இங்கு சொல்லிவிடுகிறேன். நீங்கள் எழுப்பிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்கள் மிகப் பெரிய தண்டனை என்கிறீர்கள். (குறுக்கீடு) விதி முறைப்படி நான் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஒரு தீர்ப்பினை நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)